அனுப்புநர்                                        பெறுநர்

திருமதி. சு. நாகரத்தினம்,

மாண்புமிகு மேயர்,

ஈரோடு மாநகராட்சி,

ஈரோடு – 638 001

**<u>ந.க.எண். சி3/2023                    நாள் 30.06.2023</u>**

அய்யா/அம்மையீர்

பொருள்- ஈரோடு மாமன்றம் – 30.06.2023-ஆம் தேதி மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள் – மாமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைத்தல் – தொடர்பாக.

பார்வை- 30.06.2023-ஆம் தேதிய சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

////

ஈரோடு மாமன்றத்தின் 2023-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30.06.2023-ஆம் தேதி வெள்ளிக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் மாமன்ற கூட்டரங்கில் நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள் இத்துடன் தங்களுக்கு இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது என்பதனை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேயர்,
ஈரோடு மாமன்றம்,
ஈரோடு

இணைப்பு- கூட்ட நடவடிக்கைகள்

## கூட்ட நடவடிக்கைகள்

### நன்றித் தீர்மானம்

ஈரோடு மாநகராட்சியில் 1505 சாலைகள் அமைப்பதற்கு ரூபாய் 133.81 கோடியும்,

மேலும் புதிதாக 5431 எண்ணிக்கையிலான தெருவிளக்குகளும், 1242 எண்ணிக்கையிலான புதிதாக மின்கம்பங்கள் அமைப்பதற்கு ரூ.15.89 கோடியும் வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், உள்ளாட்சித்துறை அமைச்சர் அண்ணன் நேரு அவர்களுக்கும் நிதியை பெற்றுத்தந்த மாண்புமிகு தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அண்ணன் சு. முத்துசாமி அவர்களுக்கும் ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களுக்கும் இம்மாமன்றம் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றது.

### வாழ்த்து மற்றும் பாராட்டு தீர்மானம்

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளராக பணிபுரிந்து தமிழக அரசின் புதிய தலைமைச் செயலாளராக பணிப்பொறுப்பேற்கும் திரு. சிவ்தாஸ்மீனா, அவர்களுக்கு இம்மாமன்றம் தனது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றது.

**1.)** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட குடிநீர் நிதி பணிகள் தணிக்கை மேற்கொண்ட வகையில் தணிக்கை அறிக்கை 2018-19ம் ஆண்டு பத்தி எண்.16-இல் தொகை வழங்கப்பட்டதில் தொகை ரூ.25696/– இழப்பீடு எனவும் மேற்கண்ட தொகையினை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரரிடமிருந்து பிடித்தம் செய்யுவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி தொகை ரூ.25696/– சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் பெயரில் காலங் கடந்த வைப்பத் தொகை பதிவேட்டில் உள்ள தொகைகளை கீழ்க்கண்டவாறு பிடித்தம் செய்து மாநகராட்சி கணக்கில் வரவு வைக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

திருவாளர்கள்

| வ. எண். | பெயர் | வைப்புப் பதிவேடு விபரம் | வருடம் | பக்கம் எண். | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | எம்.ஆர். எம். கன்ஸ்ட்ரக்ஸன் | WS-Vol-3 | 2018-19 | 62 | 25696.00 |

<u>அலுவலகக் குறிப்பு :-</u>

அவசர அவசியத்தை முன்னிட்டு மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று காலங் கடந்த வைப்புத் தொகை ரூ.25696/– ஐ சரி செய்தமைக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண். பி3/3421/2017**

**446. அனுமதி வழங்கப்பட்டது.**

**2.)** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட வருவாய் நிதி பணிகள் தணிக்கை மேற்கொண்ட வகையில் தணிக்கை அறிக்கை 2020-2021ஆம் ஆண்டு பத்தி எண். 108-ல் தொகை வழங்கப்பட்டதில் தொகை ரூ.**51918/–** இழப்பீடு எனவும் மேற்கண்ட தொகையினை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரரிடமிருந்து பிடித்தம் செய்யுவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி தொகை ரூ.**51918/–** சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் பெயரில் காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் உள்ள தொகைகளை கீழ்க்கண்டவாறு பிடித்தம் செய்து மாநகராட்சி கணக்கில் வரவு வைக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

திருவாளர்கள்

| **வ. எண்.** | **பெயர்** | **வைப்புப் பதிவேடு விபரம்** | **வருடம்** | **பக்கம் எண்.** | **தொகை ரூ.** |
|---|---|---|---|---|---|
| 1. | அசோக்ராஜா அன் கோ | RF-Vol-9 | 2018-19 | 23 | 21918.00 |
| | அசோக்ராஜா அன் கோ | RF-Vol-9 | 2018-19 | 27 | 30000.00 |
| | மொத்தம் | | | | 51918.00 |

<u>**அலுவலகக் குறிப்பு :-**</u>

அவசர அவசியத்தை முன்னிட்டு மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று காலங் கடந்த வைப்புத் தொகை ரூ.**51918/–** ஐ சரி செய்தமைக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண். பி3/3421/2017**

**447. அனுமதி வழங்கப்பட்டது.**

**3.)** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட குடிநீர் நிதி பணிகள் தணிக்கை மேற்கொண்ட வகையில் 2016-2017 வருவாய் நிதி தணிக்கை அறிக்கையில் பத்தி எண்.71-அ.வில் தொகை வழங்கப்பட்டதில் தொகை ரூ.**43750/–** இழப்பீடு எனவும் மேற்கண்ட தொகையினை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரரிடமிருந்து பிடித்தம் செய்யுவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி தொகை ரூ.**43750/–** சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் பெயரில் காலங் கடந்த வைப்பத் தொகை பதிவேட்டில் உள்ள தொகைகளை கீழ்க்கண்டவாறு பிடித்தம் செய்து மாநகராட்சி கணக்கில் வரவு வைக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

திருவாளர்கள்

| **வ. எண்.** | **பெயர்** | **வைப்புப் பதிவேடு விபரம்** | **வருடம்** | **பக்கம் எண்.** | **தொகை ரூ.** |
|---|---|---|---|---|---|
| 1. | ஆர்.கே.அன்டு கோ | WS-Vol-2 | 2015-16 | 61 | 17548.00 |
| 2. | ஆர்.கே.அன்டு கோ | WS-Vol-2 | 2015-16 | 64 | 7400.00 |
| 3. | ஆர்.கே.அன்டு கோ | WS-Vol-2 | 2015-16 | 65 | 18000.00 |
| 4. | ஆர்.கே.அன்டு கோ | WS-Vol-2 | 2015-16 | 67 | 802.00 |
| | மொத்தம் | | | | 43750.00 |

**அலுவலகக் குறிப்பு :-**

அவசர அவசியத்தை முன்னிட்டு மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று காலங் கடந்த வைப்புத் தொகை ரூ.**43750/–** ஐ சரி செய்தமைக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண். பி3/3421/2017**

**448. அனுமதி வழங்கப்பட்டது.**

**4.)** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட வருவாய் நிதி பணிகள் தணிக்கை மேற்கொண்ட வகையில் 2017-2018 தணிக்கை அறிக்கை பத்தி எண்.71-ஆ-இல் தொகை வழங்கப்பட்டதில் தொகை ரூ.**13314/–** இழப்பீடு எனவும் மேற்கண்ட தொகையினை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரரிடமிருந்து பிடித்தம் செய்யுவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி தொகை ரூ.**13314/–** சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் பெயரில் காலங் கடந்த வைப்பத் தொகை பதிவேட்டில் உள்ள தொகைகளை கீழ்க்கண்டவாறு பிடித்தம் செய்து மாநகராட்சி கணக்கில் வரவு வைக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

திருவாளர்கள்

| **வ. எண்.** | **பெயர்** | **வைப்புப் பதிவேடு விபரம்** | **வருடம்** | **பக்கம் எண்.** | **தொகை ரூ.** |
|---|---|---|---|---|---|
| 1. | ராசி கண்ஸ்ட்ரக்ஸன் | RF-Vol-7 | 2015-16 | 69 | 13314.00 |

**<u>அலுவலகக் குறிப்பு :-</u>**

அவசர அவசியத்தை முன்னிட்டு மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று காலங் கடந்த வைப்புத் தொகை ரூ.**13314/–** ஐ சரி செய்தமைக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண். பி3/3421/2017**

## 449. அனுமதி வழங்கப்பட்டது.

**5.)** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒப்பந்தப் பணிகள் மேற்கொள்ள செலுத்தப்பட்ட முன் வைப்புத் தொகைகள் மற்றும் கூடுதல் வைப்புத் தொகைகள், மேற்கண்ட பணிகள் முடிவுற்று ஆறு மாதங்களுக்கு மேலானதாலும், தணிக்கைத் தடை ஆட்சேபணை ஏதுமில்லாததாலும், மேற்படி தொகையை திரும்ப வழங்கக் கோரி திருவாளர் எ.பி.டி இன்டஸ்டிரிஸ் பிரைவேட் லிமிடெட் அவர்கள் விண்ணப்பித்துள்ளார். விபரம் பின்வருமாறு:-

திருவாளர். எ.பி.டி இன்டஸ்டிரிஸ் பிரைவெட் லிமிடெட்

| வ.எண். | காலங்கடந்த வைப்புத் தொகைப் பதிவேடு தொகுப்பு | வருடம் | ப.எண். | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| வருவாய் நிதி | | | | |
| 1. | Z-II - RF-Vol- IV | 2018-2019 | 36 | 1,40,000.00 |
| | | | **Total** | **1,40,000.00** |

மேற்கண்ட வைப்புத் தொகைகள் காலங்கடந்த வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளதால், காலங் கடந்த வைப்புத் தொகை வருவாய் நிதி தொகை ரூ1,40,000.00/-ஐ திருவாளர் எ.பி.டி இன்டஸ்டிரிஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :-</u>

காலங் கடந்த வைப்புத் தொகை திருவாளர். எ.பி.டி இன்டஸ்டிரிஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு வருவாய் நிதி தொகை ரூ.1,40,000.00/- ஐ திருப்பி வழங்கலாம்.

**கோப்பு எண். பி3/3421/2017**

**450. அனுமதி வழங்கப்பட்டது.**

**6.)** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒப்பந்தப் பணிகள் மேற்கொள்ள செலுத்தப்பட்ட முன் வைப்புத் தொகைகள் மற்றும் கூடுதல் வைப்புத் தொகைகள், மேற்கண்ட பணிகள் முடிவுற்று ஆறு மாதங்களுக்கு மேலானதாலும், தணிக்கைத் தடை ஆட்சேபணை ஏதுமில்லாததாலும், மேற்படி தொகையை திரும்ப வழங்கக் கோரி திருவாளர். ஆனந்தன் அவர்கள் விண்ணப்பித்துள்ளார். விபரம் பின்வருமாறு:-

திருவாளர். ஆனந்தன்

| வ.எண். | காலங்கடந்த வைப்புத் தொகைப் பதிவேடு தொகுப்பு | வருடம் | ப.எண். | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| வருவாய் நிதி | | | | |
| 1. | RF-Vol- X | 2019-2020 | 37 | **23000**.00 |
| | | | **Total** | **23,000.00** |

மேற்கண்ட வைப்புத் தொகைகள் காலங்கடந்த வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளதால், காலங் கடந்த வைப்புத் தொகை வருவாய் நிதி தொகை ரூ.**23,000/-**ஐ திருவாளர். ஆனந்தன் அவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-**

காலங் கடந்த வைப்புத் தொகை திருவாளர். ஆனந்தன் அவர்களுக்கு வருவாய் நிதி தொகை ரூ.**23,000/-** ஐ திருப்பி வழங்கலாம்.

**கோப்பு எண். பி3/3421/2017**

**451. அனுமதி வழங்கப்பட்டது.**

**7.)** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒப்பந்தப் பணிகள் மேற்கொள்ள செலுத்தப்பட்ட முன் வைப்புத் தொகைகள் மற்றும் கூடுதல் வைப்புத் தொகைகள், மேற்கண்ட பணிகள் முடிவுற்று ஆறு மாதங்களுக்கு மேலானதாலும், தணிக்கைத் தடை ஆட்சேபணை ஏதுமில்லாததாலும், மேற்படி தொகையை திரும்ப வழங்கக் கோரி திருவாளர். கிரீன் லீப் கன்ஸ்ட்ரக்ஸன் அவர்கள் விண்ணப்பித்துள்ளார். விபரம் பின்வருமாறு:-

திருவாளர். கிரீன் லீப் கன்ஸ்ட்ரக்ஸன்

| வ.எண். | காலங்கடந்த வைப்புத் தொகைப் பதிவேடு தொகுப்பு | வருடம் | ப.எண். | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| வருவாய் நிதி | | | | |
| 1. | RF-Z-II-Vol- IV | 2018-2019 | 3 | 69000.00 |
| 2. | RF-Mo-Vol- IX | 2018-2019 | 27 | 69000.00 |
| 3. | RF- Mo -Vol- X | 2019-2020 | 8 | 3,39,403.00 |
| | | | **Total** | **4,77,403.00** |

மேற்கண்ட வைப்புத் தொகைகள் காலங்கடந்த வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளதால், காலங் கடந்த வைப்புத் தொகை வருவாய் நிதி தொகை ரூ.4,77,403.00 /-ஐ திருவாளர் கிரீன் லீப் கன்ஸ்ட்ரக்ஸன் அவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதியும் மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்க நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :-</u>**

அ) ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) அவசர அவசியத்தை முன்னிட்டு மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று காலங் கடந்த நிதி தொகை ரூ.4,77,403.00 /- ஐ திருப்பி வழங்கியதற்கும் ஒப்புதல் வழங்கலாம்.

**கோப்பு எண். பி4/3421/2017**

**452. ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**8.)** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒப்பந்தப் பணிகள் மேற்கொள்ள செலுத்தப்பட்ட முன் வைப்புத் தொகைகள் மற்றும் கூடுதல் வைப்புத் தொகைகள், மேற்கண்ட பணிகள் முடிவுற்று ஆறு மாதங்களுக்கு மேலானதாலும், தணிக்கைத் தடை ஆட்சேபணை ஏதுமில்லாததாலும், மேற்படி தொகையை திரும்ப வழங்கக் கோரி திருவாளர். விஷ்ணு இன்பிரா ஸ்ரெக்ட்ச்சர் அவர்கள் விண்ணப்பித்துள்ளார். விபரம் பின்வருமாறு:-

திருவாளர். விஷ்ணு இன்பிரா ஸ்ரெக்ட்ச்சர்

| வ.எண். | காலங்கடந்த வைப்புத் தொகைப் பதிவேடு தொகுப்பு | வருடம் | ப.எண். | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| | | வருவாய் நிதி | | |
| 1. | RF-Z-II-Vol- IV | 2018-2019 | 28 | 49000.00 |
| 1. | RF-Z-II-Vol- IV | 2018-2019 | 28 | 16000.00 |
| | | | **Total** | **65,000.00** |

மேற்கண்ட வைப்புத் தொகைகள் காலங்கடந்த வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளதால், காலங் கடந்த வைப்புத் தொகை வருவாய் நிதி தொகை ரூ.65,000 /-ஐ திருவாளர். விஷ்ணு இன்பிரா ஸ்ரெக்ட்ச்சர் அவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :-</u>

காலங் கடந்த வைப்புத் தொகை திருவாளர். விஷ்ணு இன்பிரா ஸ்ரெக்ட்ச்சர் அவர்களுக்கு வருவாய் நிதி தொகை ரூ.65,000 /- ஐ திருப்பி வழங்கலாம்.

**கோப்பு எண். பி4/3421/2017**

**453. அனுமதி வழங்கப்பட்டது.**

**9.)** நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடிதம், ந.க.எண்12392/ஜே2/2020, நாள்.21.08.2020 ஆம் தேதிய கடிதத்தில், பருவ மழை காலத்தில் ஏடிஸ் வகை கொசுக்கள் மூலம் அதிக அளவில் டெங்கு நோய் பரவ வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் டெங்கு போன்ற இதர நோய்களின் தாக்கத்தினை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட அறிவுறுத்தல்களின்படி கீழ்க்கண்ட வழிகாட்டுதல்களை பின்பற்றுமாறு அனைத்து துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் துப்புரவு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

1. துப்புரவு அலுவலர்கள் மற்றும் துப்புரவு ஆய்வாளர்கள் தங்கள் மண்டலத்திற்குட்பட்ட அனைத்து கொசு ஒழிப்பு பணியாளர்களையும் நான்கு பேர் கொண்ட குழுக்களாக அமைத்து பணி செய்ய அறிவுறுத்தப்பட்டது.

2. மேலும் அனைத்து குழுக்களும் தினந்தோறும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள், தெருவின் பெயர் மற்றும் வீடுகளின் எண்ணிக்கை ஆகியவற்றை ஒரு நாள் முன்னதாகவே துப்புரவு அலுவலர்கள் மூலமாக மாநகர நல அலுவலரிடம் விவரம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

3. ஒவ்வொரு குழுவும் தினந்தோறும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளை முழுமையாக கொசு ஒழிப்பு பணிகளில் ஈடுபடுத்தப்படுவதை துப்புரவு ஆய்வாளர்கள் உறுதிபடுத்த வேண்டும்.

4. தினசரி காய்ச்சல் (Fever Cluster)வந்த தெருக்கள் மற்றும் டெங்குகாய்ச்சல் வந்த தெருக்களில் சுமார் 1/2 சதுர கிலோ மீட்டர் (500 வீடுகளுக்கு) கொசு ஒழிப்பு மருந்து புகை தெளிப்பான் மூலம் அடிக்கப்பட்ட வேண்டும்.

5. கொசுப்புழு ஒழிப்பு பணிகளை ஒவ்வொரு துப்புரவு ஆய்வாளரும் தினசரி ஒரு தெருவில் நாற்பது வீடுகள் வரை மறு ஆய்வு செய்தல் வேண்டும்.

6. பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், திரையரங்குகள், தங்கும் விடுதிகள், உணவகங்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் அமைந்துள்ள இடங்கள் மற்றும் பொது மக்கள் அதிக அளவில் கூடும் வியாபார இடங்களில் தங்களின் இடத்தில் கொசுப்புழுக்கலோ, கொசுப்புழு உற்பத்தியாகும் பொருட்களோ இல்லை என்று வாரம்தோறும் சான்று பெறுதல் வேண்டும். இதனை துப்புரவு ஆய்வாளர்கள் உறுதி செய்தல் வேண்டும்.

7. பூட்டிய வீடுகள், பூங்காக்கள், காலி இடங்கள் மற்றும் நிறுவனக்கட்டிடங்களில் மொட்டை மாடிகள், படிக்கட்டுகள், மற்றும் சன் சேட்டில் (Sun Shade) மழை நீர் தேங்காமல் இருப்பதை ஆய்வு செய்ய வேண்டும்.

8.அனைத்து பணியாளர்களும் கண்டிப்பாக முகக்கவசம் மற்றும் கையுறை அணிந்திருக்க வேண்டும். மேற்படி பணிக்கு தேவையான Torch Light, சோப்பு, நீளமாக கரண்டி, பிளீச்சிங் பவுடர், அபேட் கரைசல், கடப்பாரை, சுத்தி, Syntex Tank, கட்டணம் வசூலிக்கும் புத்தகம் மற்றும் Fogging மருந்து அடிக்கும் இயந்திரம் ஆகியவற்றை பணி செய்யும் இடத்தில் வைத்திருக்க வேண்டும்.

9. காய்ச்சல் அதிகம் பாதிப்புள்ளதாக கருதப்படும் இடங்கள் மற்றும் கடந்த காலங்களில் அதிகம் டெங்கு பாதித்த இடங்களில் மாஸ் கிளீனிங் செய்ய வேண்டும். மேலும் அந்த வகையில் எத்தனை இடங்கள் சுத்தம் செய்யப்பட்டுள்ளது என்ற அறிக்கையினை மாநகர நல அலுவலருக்கு சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டது.

10. டெங்கு காய்ச்சல் குறித்து அனைத்து பகுதிகளிலும் நியமிக்கப்பட்ட குழு பணியாளர்கள் மூலமும், ஒலி பெருக்கி மூலமும், குடியிருப்பு தாரர்களுக்கு குடிநீரை

பாதுகாப்பாக சேமித்து வைப்பது குறித்தும், மழைநீர் தேங்க வாய்ப்புள்ள தேவையற்ற பொருட்களை வீடுகள் மற்றும் சுற்றுப்புறங்களில் இல்லாத வண்ணம் பார்த்துக் கொள்ளுமாறும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த ஒருங்கிணைப்பு குழு கூட்டம் 12.09.2022ல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கீழ்கண்டுள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டன.

டெங்கு காய்ச்சல் மற்றும் காய்ச்சல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ளஅனைத்து வீடுகளிலும் கொசுப்புழு ஒழிப்பு பணி மற்றும் புகை மருந்து அடிக்கும் பணியை மேற்கொள்ள வேண்டும்.

அனைத்து பகுதிகளிலும் வழங்கும் குடிநீரில் குளோரின் அளவை தொடர்ந்து கண்காணிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

மாநகராட்சி பகுதிகளில் உள்ள அரசு கட்டிடங்கள், மருத்துவமனைகள், குடோன்கள் புதிதாக கட்டப்படும் கட்டிடங்கள் மற்றும் வாகனங்கள் பழுது நீக்கும் கடைகளை ஆய்வு செய்து, கொசுப்புழு தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், ஈரோடு அவர்களின் கடிதம் எண். 3793/அ4/2013, ஈரோடு சுகாதார மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு நடவடிக்கை கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ள கடந்த 2017 முதல் ஒவ்வொரு 300 வீடுகளுக்கு ஒரு கொசு ஒழிப்பு பணியாளர் வீதம் டெங்கு தடுப்பு பணி மேற்கொள்ள சம்பந்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணி அமர்த்தி துரித நடவடிக்கை எடுக்கப்பட்டதன் பேரில் இம்மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கப்பட்டது என்றும்,

ஈரோடு மாவட்டத்தில் தென்மேற்கு பருவ மழை காலம் தொடங்க இருப்பதாலும், அடிக்கடி மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாலும், முக்கியமாக வீடுகளில் கொசுப்புழு உற்பத்தியாகும் பழைய டயர், Scrap, சிறிய கொள்கலன்களில் நீர் தேங்கி விடாமலும் கண்காணிப்பது மிக முக்கியமான பணியாகும் என்றும்,

மேலும் பழைய டயர், Scrap ஆகியவற்றில் தேங்கியுள்ள தண்ணீரில் கொசு முட்டையிட்டு ஏராளமான கொசு வர ஏதுவாக இருப்பதால் Highly infected ஆக உள்ளது என்றும், அதனால் கொசுப்புழு தடுப்புப் பணிக்காக DBC / Worker தினக்கூலி அடிப்படையில் நியமிக்க வேண்டி உள்ளதால் ஈரோடு மாநகராட்சி பகுதியில் தேவையான DBC களப்பணியாளர்களை நியமிக்க ஆவண செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் இது குறித்து கொசுக்களை பிடித்து ஆய்வகத்தில் ஆய்வு செய்யப்பட்டதில், கொசுப்புழுக்களில் டெங்கு கிருமிகள் இருப்பது உறுதி செய்யப்பட்டது. டெங்கு காய்ச்சல் பொதுமக்களுக்கு பரவக்கூடிய வாய்ப்பு இருப்பதால் இது ஒரு எச்சரிக்கையாகவே பார்க்கப்படுகிறது.

ஈரோடு மாநகராட்சியில் மொத்தம் 1,69,000 வீடுகள் உள்ளன. 300 வீடுகளுக்கு ஒருவர் என்ற வீதத்தில் மொத்தம் 560 பணியாளர்கள் நியமனம் செய்யப்படவேண்டும். தற்போது முதற்கட்டமாக 150 பணியாளர்கள் மட்டும் தினக்கூலி அடிப்படையில் நியமிக்க வேண்டியுள்ளது.

எனவே, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் Schedule of Rate-ன்படி, மே‘‘2023, ஜுன் ‘‘2023, ஜுலை ‘‘2023 ஆகிய மூன்று மாதங்களுக்கு (90 நாட்களுக்கு) ஊதியம் ஒரு மணி நேரத்திற்கு ரூ.88/- வீதம் ஒரு நாளைக்கு ஒரு பணியாளருக்கு 4 மணி நேரத்திற்கு ரூ.352/– வீதத்தில் 150 பணியாளர்களை பணியமர்த்தவும், மொத்த உத்தேச செலவினம் ரூ.47,52,000/-க்கும் அனுமதி வேண்டப்படுகிறது. அவசர அவசியத்தை

முன்னிட்டு மேற்படி பணியாளர்களை பணியமர்த்த மாண்புமிகு மேயர் அவர்களின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1.கொசு ஒழிப்பு பணியின் அவசர அவசியம் கருதி கூடுதலாக 150 (DBC) கொசு ஒழிப்பு பணியாளர்களை, தற்காலிகமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் Schedule of Rate -ன்படி ஊதியம் ஒருமணி நேரத்திற்கு ரூ. 88 வீதம், ஒருநாளைக்கு ஒரு பணியாளருக்கு 4 மணி நேரத்திற்கு ரூ.352/- வீதத்தில் 150 பணியாளர்களை மே“2023, ஜுன் “2023, ஜுலை “2023 ஆகிய மூன்று மாதங்களுக்கு (90 நாட்களுக்கு) (மொத்த உத்தேச செலவினம் ரூ.47,52,000/-) பணியமர்த்த அனுமதி வழங்கலாம்.

2.மேற்படி பணியாளர்களை பணியமர்த்த மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.எச்2/2334/2023**

**454. அனுமதி வழங்கப்பட்டது.**

**10.)** ஈரோடு மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு நான்கு மண்டலங்களிலும் உள்ள பொது இடங்கள், சமுதாய கழிப்பிடங்கள், திருவிழாக்கள் நடைபெறும் இடங்கள், தினசரி காய்கறி மார்க்கெட் பகுதி, வாராந்திர சந்தை பகுதி, பேருந்து நிலைய பகுதி மற்றும் மாநகராட்சியில் அனைத்து அலுவலகங்களையும் சுத்தம் செய்ய கிருமி நாசினிகள் அவசியம் தேவைப்படுவதால், அவற்றை கொள் முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து 10.05.2023 அன்று அனைத்து மண்டல துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் அலுவலர்களின் அறிக்கையில் இருப்பு விவரம் மற்றும் தேவைப்படும் விவரங்கள் பெறப்பட்டது.

எனவே, மேற்கண்டவாறு பெறப்பட்ட துப்புரவு அலுவலர்களின் அறிக்கையின் அடிப்படையில் அனைத்து மண்டல பகுதிகளில் பொது சுகாதாரப்பிரிவில் கொசுப்புழு தடுப்பு மற்றும் ஒழிப்பு பணிகள் மற்றும் இதர சுகாதார பணிகளுக்கு தேவையான கிருமி நாசினிகள் பிளிச்சிங் பவுடர் 20,000 கிலோ, சுண்ணாம்புத்தூள் 40,000 கிலோ, பினாயில் 3000லிட்டர், லெமன் கிராஸ் ஆயில் 250 லிட்டர் ஆகியவற்றை கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் விலைவிகிதத்தின் அடிப்படையிலும், Tamilnadu Multipurpose Indco Serve கூட்டுறவு சங்கத்தின் விலை விகிதத்தின் அடிப்படையிலும் மேற்கண்ட கிருமிநாசினி பொருட்களை கொள்முதல் செய்ய ஆகும் மொத்த உத்தேச செலவினம் ரூ.19,30,000/- க்கும், ஒப்பந்தப்புள்ளி கோரி அலுவலக நடவடிக்கை மேற்கொள்வதற்கும் அனுமதி வேண்டப்படுகிறது. அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்படி செலவினத்திற்கும், ஒப்பந்தப்புள்ளிக் கோரி அலுவலக நடவடிக்கை மேற்கொள்ளவும் மாண்புமிகு மேயர் அவர்களின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1.அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.எச்2/2033/2023**

**455. அனுமதி வழங்கப்பட்டது.**

11.) ஈரோடு மாநகராட்சி பாதாள சாக்கடைத் திட்டப்பணியில் 1208.2017ம் தேதியன்று பணியில்- ஈடுபட்டிருந்தபோது திருமதி.பெரமாயி என்பவரின் கணவர் குருசாமி விபத்து காரணமாக இறந்து விட்டதால் திருமதி.பெரமாயி என்பவரால் பணியாளர் இழப்பீடு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. மேற்படி வழக்கின். இறுதி தீர்ப்பில் இழப்பீட்டுத் தொகை ரூ. 8,12,360/– மற்றும் விபத்து நடந்த நாள் முதல் நாளது வரைக்கான வட்டி 12% மற்றும் ஈமக்கிரியை செலவுத் தொகை ரூ.5000–ஐ சேர்த்து மாநகராட்சியின் மூலம் தொழிலாளர் இணை ஆணையர். ஈரோடு என்ற பெயரில் வங்கி வரைவேலை மூலம் சமர்ப்பிக்குமாறும், இத்தொகையினை மேற்கண்ட பணியை மேற்கொண்ட ஒப்பந்ததாரர் திருவாளர். ஆங்கர் செராமிக் கம்பெனி பிரைவேட் லிட் ஒப்பந்த நிறுவனத்திடமிருந்து ஈரோடு மாநகராட்சிக்கு ஈடு செய்து கொள்ளுமாறு நீதிமன்றத் தீர்ப்பில் உத்திரவிடப்பட்டுள்ளது.

ஆகவே, இழப்பீட்டுத் தொகையினை மாநகராட்சியின் மூலம் தொழிலாளர் இணை ஆணையர், ஈரோடு என்ற பெயரில் வங்கி வரைவோலையாக செலுத்துவதற்கும் மேற்படி தொகையினை பணியினை மேற்கொண்ட திருவாளர். ஆங்கர் செராமிக் கம்பெனி பிரைவேட் லிட் ஒப்பந்ததாரரின் வைப்புத் தொகையிலிருந்து பிடித்தம் செய்து மாநகராட்சி கணக்கில் ஈடுசெய்யவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி நீதிமன்றத்திற்கு தொகை செலுத்த வேண்டியதன் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**கோப்பு எண். இ4/1775/2018**

**456. ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**12.)** 098 ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக்கு இடைத்தேர்தல் 27.02.2023 அன்று வாக்குபதிவு நடைபெறவுள்ளது. மேலும் வாக்குபதிவு முடிவுற்றதும் அன்று மாலை அரசு பொறியியல் (IRTT) கல்லூரியில் உள்ள இயந்திரவியல் துறையில் (Mechanical Block) உள்ள StrongRoom-ல் வைத்து பாதுகாக்க உள்ளதால் வாக்குபதிவு செய்யப்பட்ட இயந்திரங்களை சரிபார்த்து வாங்கும் பணியில் ஈடுபடும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு குடிநீர் வசதி (20 லிட்டர் கேன் மற்றும் குடிநீர் பாட்டம்) செய்யவும், பிளாஸ்டிக் சேர், சின்டெக்ஸ் டேங்க் அமைத்து கூடுதல் தற்காலிக கை கழுவும் தொட்டி அமைக்கவும் தேர்தல் நடத்தும் அலுவலர் அவர்கள் அறிவுறுத்தி உள்ளதால், மேற்படி பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டது.

மேற்கண்ட பணி தேர்தல் பணி என்பதால் பணிகளின் அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் 2008 பிரிவு-15–ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர்

விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் ரூ.1,68,858/–ஐ வழங்கிய திருவாளர். கிங் கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.1,68,858/–ஐ திருவாளர். கிங் கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**கோப்பு எண்: இ1/705–1/2023**

**457. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**13.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1க்குட்பட்ட தனியார் பள்ளிகளான அருள் நெறி தொடக்கப்பள்ளி, அருள் நெறி உயர்நிலைப் பள்ளி, விநாயகா வித்யாபவன் நர்சரி மற்றும் பிரைமரிப் பள்ளி, நந்தி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மற்றும் கிருஸ்து ஜோதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி (மாதிரி வாக்குசாவடி மையம் நீங்கலாக)ஆகிய 05 பள்ளிகளில் அமைந்துள்ள 19 வாக்கு சாவடிகளில் தேர்தல் தொடர்பான அடிப்படை வசதிகளான நிழற்குடைகள் (சாமியானா), குடிநீர்வசதி, வகுப்பறையில் தடுப்பாண்கள் வைத்தல், மின்சார வசதி, சேர், டேபிள் வாக்கு மையத்திலிருந்து 100 மீட்டர் மற்றும் 200 மீட்டர் தொலைவில் வரையறை கோடுகள் வரைதல் மற்றும்

மாற்றுத்திறனாளிகள் எளிதில் வாக்கு அளிக்க சாய்வுதளம் அமைத்தல் ஆகிய வசதிகளை வாக்குசாவடிகளில் செய்ய தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 19 வாக்குச்சாவடி மையங்களில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள அவசியம் ஏற்பட்டது. எனவே மேற்படி தேர்தல் பணிகளின் அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் 2008 பிரிவு-15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த மொத்த செலவினம் ரூ.8,52,161/- (GST-18% உட்பட) வழங்கிய திருவாளர்.கிங் கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணிகள் செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.8,52,161/-ஐ திருவாளர்.கிங் கன்ஸ்ட்ரக்சன்ஸ்,ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u>

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண். இ1/705-2/2023**

**458. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**14.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1க்குட்பட்ட ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1க்குட்பட்ட வைராபாளையம் மாநகராட்சி தொடக்கப்பள்ளி, அசோகபுரம் மாநகராட்சி தொடக்கப்பள்ளி, விநாயகர் கோவில் வீதி மாநகராட்சி நடுநலைப்பள்ளி, பி.பெ.அக்ரஹாரம் இசைப்பள்ளி மற்றும் பி.பெ.அக்ரஹாரம் அரசு உயர்நிலைப்பள்ளி ஆக மொத்தம் 05 பள்ளிகளில் அமைந்துள்ள 22 வாக்கு சாவடிகளில் தேர்தல் தொடர்பான அடிப்படை வசதிகளான நிழற்குடைகள் (சாமியானா), வகுப்பறைத் தடுப்பாண்கள் வைத்தல், மின்சார வசதி, பிளாஸ்டிக் சேர், டேபிள், வாக்கு சாவடி மையத்திலிருந்து 100 மீட்டர் மற்றும் 200 மீட்டர் தொலைவை குறிக்கும் வரையறை கோடுகள் வரைதல், குடிநீர் வசதிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் எளிதில் வாக்கு அளிக்க சாய்வுதளம் அமைத்தல் போன்ற வசதிகளை வாக்குசாவடிகளில் செய்ய தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 24 வாக்குச்சாவடி மையங்களில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள அவசியம் ஏற்பட்டது. எனவே மேற்படி தேர்தல் பணிகளின் அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் 2008 பிரிவு-15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த மொத்த செலவினம் ரூ.9,24,683/- (GST-18% உட்பட) வழங்கிய திருவாளர்.கிங் கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணிகள் செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல்

தொகை ரூ.9,24,683/-ஐ திருவாளர்.கிங் கன்ஸ்ட்ரக்சன்ஸ்,ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண். இ1/705-5/2023**

**459. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**15.)** 27.02.2023 அன்று நடைபெற்ற ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தலில் இந்திய தேர்தல் ஆணையம் வாக்காளர்கள் 100 சதவீதம் ஓட்டு அளிக்கும் வகையில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில் பொதுமக்களை கவரும் வகையில் "மாதிரி வாக்கு சாவடி மையங்கள்" அமைக்க அறிவுரை வழங்கியது, அதற்கிணங்க ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி, ஈரோடு மாநகராட்சி. மண்டலம்-1 பகுதியில் கிருஸ்து ஜோதி பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள வாக்கு சாவடி எண்.065-ல் மாதிரி வாக்கு சாவடி மையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டு அங்கு அமைந்துள்ள மாதிரி வாக்கு சாவடி மையம் எண்.065-ல் குடிநீர் வசதிகள், சாமியானா பந்தல் அமைத்தல், எலக்ட்ரிக்கல் மற்றும் டேபிள் சேர்கள் அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வாக்குப்பதிவினை சிறப்பாக நடத்தி முடிக்க அறிவுறுத்தப்பட்டது. பணியின் அவசர அவசியம் கருதி ஈரோடு

மாநகராட்சி சட்டம் 2008 பிரிவு 15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் ஒப்பு நோக்கப்பட்டு அதில் குறைவாக மொத்த செலவினம் ரூ.94,483/-க்கு (GST 18% உட்பட) கொடுத்துள்ள M/s.King Construction, Erode அவர்களின் விலைப்புள்ளி உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக உள்ளதால் அதனை ஏற்று இப்பணியை மேற்கொண்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.94,483/- ஐ இப்பணியை மேற்கொண்ட M/s.King Construction, Erode அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு:**</u>

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண். இ1/705-3/2023**

**460. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**16.)** மாநகராட்சி மண்டலம்- 1க்குட்பட்ட வீரப்பன் சத்திரம் அலுவலகம், பி.பெ.அக்ரஹாரம் மாநகராட்சி தொடக்கபள்ளி, அரசு உதவி பெறும் மதராசா பள்ளி பி.பெ.அக்ரஹாரம் மற்றும் திருநகர் காலனி மாநகராட்சி நடுநிலைப்பள்ளி ஆக மொத்தம் 04 வாக்கு மையங்களில் அமைந்துள்ள 29 வாக்குச்சாவடிகளில் தேர்தல் தொடர்பான அடிப்படை வசதிகளான நிழற்குடைகள் (சாமியானா), குடிநீர்வசதி, வகுப்பறையில் தடுப்பாண்கள் வைத்தல், மின்சார வசதி, சேர், டேபிள் வாக்கு மையத்திலிருந்து 100 மீட்டர் மற்றும் 200 மீட்டர்

தொலைவில் வரையறை கோடுகள் வரைதல் போன்ற அடிப்படை வசதிகள் மேற்கொள்ள அவசியம் ஏற்பட்டது. எனவே மேற்படி தேர்தல் பணிகளின் அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு-15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த மொத்த செலவினம் ரூ.9,73,347/- (GST-18% உட்பட) வழங்கிய திருவாளர்.கிங் கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணிகள் செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.9,73,347/-ஐ திருவாளர்.கிங் கன்ஸ்ட்ரக்சன்ஸ்,ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு** :</u>

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண். இ1/705-4/2023**

**461. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**17.)** ஈரோடு மாநகராட்சியில் 30.01.2023 - அன்று வருமான வரித்துறை அதிகாரிகளால் 2016-2017 முதல் 2021-2022 - ஆம் ஆண்டு முடிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அதற்கான உரிய கோப்புகள் மற்றும் விவரங்களை சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து கடந்த 26.04.2023- ஆம் தேதியன்று வருமான வரித்துறை அலுவலகம் (TDS Ward) திருப்பூர் - இல் நேரில் ஆஜராகி விவரங்கள்

சமர்ப்பிக்கப்பட்டது. வருமான வரித்துறை அதிகாரிகளால் மேற்க்கொள்ளப்படும் விசாரணைகளுக்கு தொடர்ந்து ஆஜராகத் தொகை ரூ. 50,000/- என நிர்ணயித்து அதற்கான முன்பண தொகையாக ரூ. 20,000/- ஐ வழங்க கோரி திரு. எஸ். சக்திவேல், வழக்கறிஞர் அவர்கள் விண்ணப்பித்துள்ளார். மேற்படி திரு. எஸ்.சக்திவேல், வழக்கறிஞர் அவர்களுக்கு முன்பணத் தொகை ரூ.20,000/- ஐ வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மேற்படி விசாரணைக்கு ஆஜராகத் தொகை ரூ.50,000- வழங்க அனுமதிக்கலாம். மேலும் அவசர அவசியத்தை முன்னிட்டு மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று திரு. எஸ். சக்திவேல், வழக்கறிஞர் அவர்களுக்கு முன்பணத் தொகை ரூ.20,000- வழங்கவும் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். பி1/2300/2023**

**462. அனுமதி வழங்கப்பட்டது.**

**18.)** ஈரோடு மாநகராட்சி நேதாஜி வணிக வளாக கடை எண். 55 (வரிவிதிப்பு எண்.056/13575)-ன் குத்தகைதாரர் திரு. பி. விஷ்ணுவர்தன் என்பவருக்கு உரிமக் காலம் 31.03.2022 உடன் முடிவடைந்த நிலையில் மேலும் மூன்றாண்டுகளுக்கு மூன்றாம் முறையாக 01.04.2022 முதல் மாத வாடகை ரூ.6613-லிருந்து 15% உயர்வு செய்து ரூ.7605-க்கு உரிமம் நீடிப்பு செய்து வழங்கப்பட்டது. இந்நிலையில்

மேற்படி குத்தகைதாரருக்கு 01.04.2021 முதல் 31.03.2022 வரை (15% உயர்வு செய்யப்பட்ட வித்தியாசத் தொகை) தவறுதலாக ரூ.14052- கணினியில் கேட்பு வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகை ரூ.14052-ஐ நீக்கம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். அ1/3640/2020**

**463. அனுமதி வழங்கப்பட்டது.**

**19.)** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட கடைகளின் உரிமதாரர்கள் தங்களது கடைகளுக்குரிய மாத வாடகை அதிகமாக இருப்பதாக தெரிவித்தும் தொடர்ந்து கடையினை நடத்த முடியவில்லை எனவும் மாநகராட்சி வசம் 31.05.2023 உடன் ஒப்படைப்பதாக தெரிவித்துள்ளார்கள்.

| வ. எண். | குத்தகைதாரர் பெயர் | கடையின் விபரம் |
|---|---|---|
| 1. | ஆர். ரமேஷ் | ஆர்.கே.வி. சாலை தினசரி அங்காடி ஐடிஎஸ்எம்டி திட்டக் கடை எண்.82 |
| 2. | பி. ராஜா | ஆர்.கே.வி. சாலை தினசரி அங்காடி ஐடிஎஸ்எம்டி திட்டக் கடை எண்.81 |
| 3. | ஆர். திலகவதி | ஆர்.கே.வி. சாலை தினசரி அங்காடி ஐடிஎஸ்எம்டி திட்டக் கடை எண்.80 |
| 4. | சாந்தி & கோ | மத்திய பேருந்து நிலைய மேற்கு புற முதல்தளக் கடை எண்.9 |

எனவே மேற்படி கடைகளின் குத்தகை உரிமத்தை 31.05.2023 உடன் ரத்து செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்படி கடைகளை பொது ஏலம் கோரவும், பொது ஏல அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிடுவதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.25000-க்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். அ1/3640/2020**

**464. அனுமதி வழங்கப்பட்டது.**

**20.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2க்குட்பட்ட வார்டு எண்.27 மற்றும் 37-ல் மாநகராட்சிக்கு சொந்தமான ஈரோடு மாநகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளி காவேரிரோடு, மாநகராட்சி தொடக்கப்பள்ளி ராஜாஜிபுரம், ஈரோடு மாநகராட்சி காமராஜ் மேல்நிலைப்பள்ளி மற்றும் தனியாருக்கு சொந்தமான சித்தார்த்தா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் 18 வாக்குச்சாடிகளில் தேர்தல் தொடர்பான அடிப்படை பணிகளான குடிநீர் வசதி, மின்சார வசதி, சாமியானா பந்தல் நிழற்க்குடை மேலும் பள்ளிகளில் ஏற்கனவே உள்ள மின்விசிறிகள் மற்றும் மின் விளக்குகள் குறைவான அளவில் உள்ள வகுப்பறைகளுக்கு கூடுதலாக வாடகை அடிப்படையில் மின்விசிறிகள் மற்றும் மின் விளக்குகள் அமைக்கப்பட வேண்டியுள்ளது மற்றும் சில பள்ளி

வகுப்பறைகளில் வாடகை அடிப்படையில் தடுப்புகள் அமைத்து (Partition) வாக்குச்சாடிகள் அமைக்கப்பட வேண்டியுள்ளது. மேலும் வாக்குச்சாவடி மையங்களின் முன்புறம் மாற்றுத்திறனாளிகள் எளிதாக செல்லும் வகையில் சாய்வு தளம் (RAMP) அமைத்தல் மற்றம் வாக்குச்சாவடியிலிருந்து 100 மீ மற்றும் 200 மீ வரையறை கோடுகள் வரைதல் ஏற்ப்பட்டது. போன்ற பணிகள் மேற்கொள்ள அவசியம் ஏற்பட்டது.

எனவே தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் 2008 பிரிவு 15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் ஒப்பு நோக்கப்பட்டு அதில் குறைவாக மொத்த செலவினம் ரூ. 7,58,216/-க்கு (GST 18% உட்பட) கொடுத்துள்ள திரு. N. Arumugam, Erode அவர்களின் விலைப்புள்ளி உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக உள்ளதால் அதனை ஏற்று இப்பணியை மேற்கொண்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.7,58,216/-ஐ இப்பணியை மேற்கொண்ட திரு.N. Arumugam, Erode அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண். இ1/07041/2022**

**465. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

21.) ஈரோடு மாநகராட்சி மண்டலம்-4க்குட்பட்ட சாஸ்திரி நகர் சந்தை. மண்டல அலுவலகம்-4 அருகில் உள்ள சிறுபாலம் மற்றும் அண்ணமார் பெட்ரோல் பங்க் ஆகிய பகுதிகளில் உள்ள பிரதான சாலைகளில் அமைந்துள்ள பெரிய வடிகால்களில் மழை காலங்களில் மழைநீர் அதிகப்படியாக சென்றதால், பெரிய வடிகால்களில் மழைநீரில் அடித்து வரப்பட்ட மரக்கிளைகள், சத்தைகள், செடிகொடிகள் மற்றும் பிளாஸ்டிக் பைகள் அடித்து வரப்பட்டு மழைநீர் சரிவர செல்லாமல் சாலையில் மழைநீர் தேங்கி அருகில் உள்ள வீடுகளுக்குள் புகுந்தது. இதனை தடுக்கும் வண்ணம் பெரிய வடிகால்களில் குறுக்கே உடனடியாக இரும்பு கிரில் அமைக்க 4-ம் மண்டலத்தலைவர், மாமன்ற உறுப்பினர் மற்றும் சுகாதார அலுவலர்களுடன் மேற்கொள்ளப்பட்ட களஆய்வின் போது நான்காம் மண்டலத்தலைவரால் அறிவுறுத்தப்பட்டது. எனவே பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு மேற்கண்ட வடிகால்களின் குறுக்கே உடனடியாக இரும்பு கிரில் அமைக்க வேண்டிய அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் 2008 பிரிவு 15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் வரப்பெற்ற

மூன்று விலைப்புள்ளிகள் ஒப்பு நோக்கப்பட்டு அதில் குறைவாக மொத்த செலவினம் ரூ.1,23190/-க்கு (GST 18% உட்பட) கொடுத்துள்ள Thiru. N.Arumugam, Erode, அவர்களின் விலைப்புள்ளி உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக உள்ளதால் அதனை ஏற்று இப்பணியை மேற்கொண்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.1,23,190/-ஐ இப்பணியை மேற்கொண்ட Thiru. N. Arumugam அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண். இ1/7102/2022**

**466. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**22.)** தமிழக அரசின் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தின் கீழ் ஈரோடு மாநகராட்சி வார்டுஎண் 20 க்குட்பட்ட குமலான்குட்டை தொடக்கப்பள்ளி வளாகத்தில் மண்டலம் 2-க்குட்பட்ட வார்டுகளில் உள்ள அனைத்து பொதுமக்களும் பயன்பெறும் வகையில் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. அதுசமயம் மருத்துவ முகாமில் பொதுமக்கள் கலந்து கொள்ளும் வகையிலும் மருத்துவர்கள் சிகிச்சை அளிக்க தேவையான அடிப்படை வசதிகளான சாமியான நிழற்குடை, மின்விசிறி, தரைவிரிப்பு, டேபிள் (ம) சேர், சிறப்பு முகாம் சம்பந்தமான பேனர்கள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் முகாம் நடைபெறவுள்ள

பள்ளியின் முகத்துவாரத்தில் அழகிய வரவேற்பு பந்தல் ஆகியவை அமைக்கப்படவேண்டியுள்ளது. எ வே, பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் 2008 பிரிவு 15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு.என்.ஆறுமுகம், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கா பட்டியல் தொகை ரூ.1,95,210/-ஐ திரு.என்.ஆறுமுகம், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு:**</u>

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண். இ1/1160/2023**

**467. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**23.)** அரசாணை எண். (Rt) எண்.91 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ME.1) துறை, நாள்.28.04.2023ல் திரு.ஜெ.பிரேம் ஆ ந்த், முன் ாள் ஆணையாளர், அவர்களை ஈரோடு மாநகராட்சிக்கு உதவி ஆணையராகவும், திரு.தே.கிருஷ்ணமூர்த்தி, முன் ாள் ஆணையாளர் குன்னூர் நகராட்சி அவர்களை ஈரோடு மாநகராட்சிக்கு உதவி ஆணையராகவும் பணி மாறுதல் செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு -**

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண். சி1/2049/2023**

**468. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**24.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம் - 3 க்குட்பட்ட வார்டு எண் : 34, 44, 46 மற்றும் 51 ல் உள்ள பகுதிகளில் பல வீதிகள் வார்டுகள் மறு சீரமைப்பு செய்யப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் 20 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை தொட்டி, 5 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத்தொட்டி, 7 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத்தொட்டி மற்றும் 10 + 10 = 20 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளின் மூலம் மேற்கண்ட வார்டுகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய போதுமான குழாய் திறக்கும் பணியாளர்கள் இல்லாத காரணத்தால் குடிநீர் விநியோகம் சீரான முறையில் வழங்குவதில் தடை ஏற்படுகிறது. எனவே, மேற்கண்ட வார்டுகளில் குடிநீர் விநியோகப்பணிகளை சீரானமுறையில் செயல்படுத்த ஆடவர் குழு பணியாளர்கள் மூலம் புதிதாக தினசரி 5 நபர்களை குடிநீர் விநியோகம் பணியினை மேற்கொள்ள ஆடவர் சுய உதவிக்குழுக்கள் மூலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்.6492/2022/எ2 நாள். 30.06.2022-ல் நிர்ணயித்த

தினக்கூலி அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக 01.05.2023 முதல் 30.06.2023 வரையில் உள்ள 2 மாத காலத்திற்கு பெற்று குடிநீர் விநியோகப்பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான ஊதியத் தொகை (5 × 707 × 60) ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,12,500/-க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. அனுமதி வழங்கலாம்

2. பணியின் அவசர அவசியத்தை கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண். இ2/2630/2019-ம3**

**469. ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**25.)** அரசாணை எண். (எம்எஸ்) எண். 142 நிதி (படிகள்) நாள். 17.05.2023-ல் மாநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அகவிலைப்படி 38 சதவீதத்தில் இருந்து 01.04.2023 முதல் 42 சதவீதம் (4 சதவீதம் உயர்வு) அளித்து உத்திரவிடப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :-</u>**

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்,

**ந.க.எண். சி2/2386/2023**

**470. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**26.)** ஈரோடு மாநகராட்சி, முத்தம்பாளையம் கிராமம் – வார்டு எண். 49 ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், புதிய ரீ.சர்வே எண். 723, 727/3 –இல் தமிழ்நாடு நகர்புற வாழ்விடர் மேம்பட்டு வாரியம் மூலம் முத்தம்பாளையம் பாரதி நகரில் அமைந்துள்ள 256 குடியிருப்புகள் கொண்ட அனுமதியற்ற அடுக்குமாடி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ./ஈ.உ.தி.கு எண்.82/2018, ஈரோடு உள்ளூர் திட்டக் குழுமம் ஈரோடு அவர்களின் கடித ந.க.எண் 63/16 ஈ.உ.தி.கு–2 நாள். 08.11.2018.-ன்படி அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள், பூங்கா, மழைநீர் வடிகால், குழந்தைகள் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் இடம் ஆகியவற்றிக்கான செக்குப்பந்தி விவரம் கொண்ட தானசாசன பத்திரம் விவரம்

ஈரோடு மாவட்டம், மற்றும் வட்டம், ஈரோடு மாநகராட்சி, அதன் தற்கால ஆணையாளர் திருமதி.பு.ஜானகி இரவீந்திரன் அவர்களுக்கு ஈரோடு மாவட்டம், ஈரோடு மாநகராட்சி, ஈரோடு 'இ' கிராமம், க.ச எண்: 723, 727/3-ல் செயற்பொறியாளர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், ஈரோடு வீட்டு வசதி பிரிவு, அவர்களின் செயல்முறை கடித எண் LA1/1484/2007 நாள்: 08.07.2014 ன் படி 256 எண்ணிக்கை கொண்ட அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கு நிலம் மற்றும் அனுமதி வழங்கப்பட்டு உறுப்பினர் செயலர், ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம் மூலம் கட்டிட அனுமதி வழங்கப்பட்டு அந்த நிலத்தின் வரைபட ஒப்புதல் எண்: 82/2018 நாள்: 08.11.2018 அன்று வழங்கப்பட்டுள்ளது. அந்த நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள தார் சாலைகள்,

பூங்காகள், மழைநீர் வடிகால் கால்வாய், கழிவு நீர் தொட்டி மற்றும் மின்மோட்டார் அறையுடன் கூடிய குடிநீர் தொட்டி இவைகளுக்கு செக்குப்பந்தி விபரம்

**<u>I-அயிட்டம்</u>** **<u>தார் சாலை 1,2 மற்றும் 3</u>**

**i) <u>சாலை எண் - 1</u>**

ஈரோடு வட்டம், ஈரோடு 'இ' கிராமம் புல எண்கள் 723, 727/3-ல் ஆகிய நிலங்களில் அமைந்துள்ள 4.80 மீ அகல தார் சாலை 1-க்கான செக்குப்பந்தி விபரம்

| | | |
|---|---|---|
| புல எண் 722-ல் அமைந்துள்ள 9.00 மீ அகல மாநகராட்சி தார் சாலைக்கு | - | வடக்கு |
| திட்டப்பகுதியில் அமைந்துள்ள பூங்காவிற்கு | - | தெற்கு |
| பிளாக் C மற்றும் D -க்கு | - | மேற்கு |
| பிளாக் A மற்றும் B -க்கு | - | கிழக்கு |

இதன் மத்தியில் தென்வடல் 57.12 மீ நீளம், 4.80 மீ அகலம் கொண்ட 274.18 சதுர மீட்டர் விரஸ்தீரனமுள்ள 20 மி.மீ கணத்தில் ஆன தார் சாலை பகுதி முழுவதும்.

**ii) <u>சாலை எண் - 2</u>**

ஈரோடு வட்டம், ஈரோடு 'இ' கிராமம் புல எண்கள் 723, 727/3-ல் அமைந்துள்ள 7.20 மீ அகல தார் சாலை 2-க்கான செக்குப்பந்தி விபரம்

| | | |
|---|---|---|
| பிளாக் C & D மற்றும் பூங்காவிற்க்கு | - | கிழக்கு |
| நிலையில் உள்ள 7.20 மீ மாநகராட்சி சாலை, பொது பயன்பாடு மற்றும் பிளாக் E,F,G&H-க்கு | - | மேற்கு |
| புல எண் 726-ல் அமைந்துள்ள 9.00 மீ அகலமுள்ள மாநகராட்சி தார் சாலைக்கு | - | தெற்கு |
| புல எண் 722-ல் அமைந்துள்ள 9.00 மீ அகலமுள்ள மாநகராட்சி அகல தார் சாலைக்கு | - | வடக்கு |

இதன் மத்தியில் தென்வடல் 132.0 மீ நீளம், 7.20மீ அகலம் கொண்ட 950.40 சதுர மீட்டர் பரப்பளவில் 3.66 மீ அகலத்திலான 483.12 சதுர மீட்டர் பரப்பு கொண்ட 20 மி.மீ கணத்தில் ஆன தார் சாலை பகுதி முழுவதும்.

**iii) சாலை எண் - 3**

ஈரோடு வட்டம், ஈரோடு 'இ' கிராமம் புல எண்கள் 723, 727/3-ல் அமைந்துள்ள 7.20மீ அகல தார் சாலை 3-க்கான செக்குப்பந்தி விபரம்

| | | |
|---|---|---|
| புல எண் 786-க்கு | - | மேற்கு |
| 7.20மீ அகலமுள்ள தார் சாலை 2-க்கு | - | கிழக்கு |
| பிளாக் F-க்கு | - | வடக்கு |
| பிளாக் G-க்கு | - | தெற்கு |

இதன் மத்தியில் கிழமேல் 30.06 மீ நீளம் 7.20 மீ அகலம் கொண்ட 216.43 சதுர மீட்டர் பரப்பளவில் 3.66 மீ அகலத்திலான 110.02 சதுர மீட்டர் விஸ்தீரனமுள்ள 20 மி.மீ கணத்தில் ஆன தார் சாலை மற்றும் 15.48 சதுர மீட்டர் பரப்பளவிலான Bell Mouth பகுதி முழுவதும், மூலை முடுக்கு 10 எண்ணிக்கைக்கு (5x5/2)x10 = 125 சதுர அடி (11.61 சதுர மீட்டர் ஆகும்.

**II-அயிட்டம் பூங்கா**

**i) பூங்கா**

ஈரோடு வட்டம், ஈரோடு 'இ' கிராமம் புல எண்கள் 723, 727/3-ல் அமைந்துள்ள பூங்காவிற்க்கான செக்குப்பந்தி அளவுகள்

| | | |
|---|---|---|
| 9.00மீ அகலமுள்ள மாநகராட்சி தார் சாலைக்கு | - | தெற்கு |
| பிளாக் B & D -க்கு மற்றும் 4.80மீ அகலமுள்ள தார் சாலை 1-க்கு | - | வடக்கு |
| புல எண் 727/2-க்கு | - | கிழக்கு |

7.20மீ அகலமுள்ள தார் சாலை 2-க்கு - மேற்கு

இதன் மத்தியில் உள்ள 684.39 சதுர மீட்டர் அளவுள்ள பூங்காவும், அதில் அமைக்கப்பட்டுள்ள 173.94 சதுர மீட்டர் Concrete Paver Block நடைபாதை மற்றும் இதில் அமைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட விளையாட்டு உபகரணங்கள் முழுவதும்

1) Metal slide - 3 Nos.
2) Double Seesaw - 2 Nos.
3) Park Bench (Metal) - 6 Nos.
4) Parallel Bar - 1 No.
5) Jungle Gym - 1 No.

**<u>III-அயிட்டம் குடிநீர் தொட்டி, ஆழ்துளை கிணறு மற்றும் மின் மோட்டார் உடன் கூடிய நீரேற்றும் அறை</u>**

**i) <u>குடிநீர் தொட்டி</u>**

ஈரோடு வட்டம், ஈரோடு ‘இ’ கிராமம் புல எண்கள் 723, 727/3-ல் அமைந்துள்ள குடிநீர் தொட்டி பூங்கா இடத்தில் அமைந்துள்ளது. அதன் விபரம்

இதன் மத்தியில் 10.0 மீ நீளமும் 2.25 மீ அகலமும் 4.40 மீ ஆழம் ஆகிய உள்அளவுகள் கொண்ட 100000 லிட்டர் கொள்ளளவுள்ள குடிநீர் தொட்டி மற்றும் அதன்

மேலுள்ள 6.60 மீ நீளமும் 2.45 அகலமும் ஆகிய உள்அளவுகள் கொண்ட மின் மோட்டார் அறை ஒன்றும் சகிதம். இதில் மும்முனை மின் இணைப்பு எண் 04-021-004-1521 மற்றும் மின் மோட்டார் (TEXMO) 5.0 HP - 2 எண்களும் அவற்றிற்கான Fittings களுடன் கூடிய GI மற்றும் PVC பைப்புகள் சகிதம்.

**ii) <u>ஆழ்துளை கிணறு-1</u>**

பிளாக் A-க்கு மேற்கு மற்றும் புல எண் 723 மற்றும் 727/3-ல் இதன் மத்தியில் 260 மீ ஆழமுள்ள 160 மி.மீ விட்டம் கொண்ட ஆழ்துளை கிணறு அதில்

இறக்கப்பட்டுள்ள 7.5 HP (TEXMO) SUBMERSIBLE பம்ப்செட் குழாய்கள் மற்றும் கேபிள்கள் முழுவதும்

**iii) <u>ஆழ்துளை கிணறு-2</u>**

பூங்காவின் மத்தியிலுள்ள 199 மீ ஆழமுள்ள 160 மி.மீ விட்டம் கொண்ட ஆழ்துளை கிணறு அதில் இறக்கப்பட்டுள்ள 7.5 HP (TEXMO) SUBMERSIBLE பம்ப்செட் குழாய்கள் மற்றும் கேபிள்கள் முழுவதும் சகிதம்.

**<u>IV-அயிட்டம் கழிவுநீர் தொட்டி</u>**

ஈரோடு வட்டம், ஈரோடு 'இ' கிராமம் புல எண்கள் 723, 727/3-ல் அமைந்துள்ள கழிவுநீர் தொட்டி பூங்கா இடத்தில் அமைந்துள்ளது. அதன் விபரம்

இதன் மத்தியில் உள்ள 10.42 மீ நீளமும் 3.00 மீ அகலமும் 2.80 மீ ஆழமும் கொண்ட கழிவுநீர் தொட்டி முழுவதும்.

**<u>V-அயிட்டம் மழைநீர் வடிகால் கால்வாய் மற்றும் குறுக்கு வடிகால்</u>**

**i) <u>மழைநீர் வடிகால் கால்வாய் மற்றும் குறுக்கு வடிகால் (CULVERT)</u>**

ஈரோடு வட்டம், ஈரோடு 'இ' கிராமம் புல எண்கள் 723, 727/3-ல் அமைந்துள்ள மழைநீர் வடிகால் கால்வாய் மற்றும் குறுக்கு வடிகால்

| | | |
|---|---|---|
| Road Side of Block A&B, C&D | - | 100.48 |
| Side of Block A | - | 13.80 |
| Side of Block C&D | - | 53.00 |
| Side of Block B&D | - | 33.40 |
| Along Park Boundary | - | 85.56 |
| Along Block E,F,G & H | - | 102.14 |
| Road Side of F & G | - | 51.12 |
| Side of Block H | - | 13.00 |

இதன் மத்தியில் 452.50 மீ நீளமும் 0.30 மீ அகலமும் கொண்ட மழைநீர் வடிகால் கால்வாய் மற்றும் 6 எண்ணிக்கையிலான குறுக்கு வடிகால் (CULVERT) சகிதம்.

**VI-அயிட்டம் தெரு விளக்குகள் மற்றும் Mini Mast Light**

**i) தெரு விளக்குகள்**

ஈரோடு வட்டம், ஈரோடு 'இ' கிராமம் புல எண்கள் 723, 727/3-ல் அமைந்துள்ள Block A,B,C,D,E,F,G & H -ன் அருகில் உள்ள ஒவ்வொரு மின்கம்பத்திலும் உள்ள தெரு விளக்குகள் என மொத்தம் 8 தெரு விளக்குகள் சகிதம்.

**ii) உயர் மின் கோபுர தெரு விளக்கு (Mini Mast Light)**

ஈரோடு வட்டம், ஈரோடு 'இ' கிராமம் புல எண்கள் 723, 727/3-ல் அமைந்துள்ள பூங்காவின் மத்தியில் உள்ள ஒரு உயர் மின் கோபுர தெரு விளக்கு (Mini Mast Light) சகிதம்.

மேற்கண்ட சாலைகள், பூங்கா, மழைநீர் வடிகால், குழந்தைகள் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் இடம் ஈரோடு மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய ஏதுவாக மனுதாரர் ஆணையாளர், ஈரோடு மாநகராட்சி என்ற பெயருக்கு தான பத்திரம் தயார் செய்து மேற்குறிப்பிட்ட அளவுகளின் படி தானபத்திரம் சமர்ப்பித்துள்ளார்.

மேற்கண்ட உத்தேச சாலைகள், பூங்கா, மழைநீர் வடிகால், குழந்தைகள் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் இடங்களை ஈரோடு மாநகராட்சிக்கு 02/05/2023 அன்று சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் தான சாசனம் பத்திர எண். 1 /2687 / 2023 – ன்படி பத்திரம் மூலம் பதிவு செய்யப்பட்டு ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டள்ளது. எனவே ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள

உத்தேச சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்களை ஈரோடு மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. அனுமதி வழங்கலாம்.
2. மனுதாரர்கள் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள உத்தேச சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்களை ஈரோடு மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ளவதற்கு, அவசர அவசியத்தை முன்னிட்டு மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். இ2/0525/2023**

**471. <u>அனுமதி வழங்கப்பட்டது.</u>**

27.) இம்மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கும் தமிழ்நாடு அரசிதழ் அறிவிப்பு நாள்.25.01.2018–ன் அடிப்படையில் 2017–18 இரண்டாம் அரையாண்டு முதல் புதிதாக அளவீடு செய்து சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டது. அவ்வாறு வரிவிதிப்பு செய்யப்பட்டதில், மண்டலம்-3ற்குட்பட்ட வார்டு எண்.30 வேளாளர் கல்வி நிறுவனங்களுக்கு 34 வரிவிதிப்புகள் புதிதாக நிர்ணயம் செய்யப்பட்டு வரிவிதிக்கப்பட்டுள்ளது. தற்போது அனைத்து கல்வி நிறுவனங்களிலும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களுக்கு (சுயநிதி கல்லூரி பாடப்பிரிவுகளுக்கான கட்டிடங்கள் தவிர்த்து) சொத்துவரியிலிருந்து விலக்களித்து

தமிழ்நாடு அரசிதழ் அறிவிப்பு நாள்.25.01.2018ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி வேளாளர் கல்வி நிறுவனங்களில் அரசு உதவி பெறும் கட்டிடங்களுக்கும் சேர்த்து 2017–2018 இரண்டாம் அரையாண்டு முதல் சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வேளாளர் கல்வி நிறுவனத்தினர் மேற்படி அரசு உதவி பெறும் கட்டிடங்களுக்கு தவறுதலாக சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்ட வரிவிதிப்பை ரத்து செய்து கொடுக்குமாறு 13.4.2023ம் தேதிய விண்ணப்பத்தில் கோரியுள்ளார்கள். 2017–18 இரண்டாம் அரையாண்டு முதல் நிர்ணயம் செய்யப்பட்ட சொத்து வரிவிதிப்புகளில் 056/030/902996, 056/030/903025, 056/030/903028, 056/030/903054, 056/030/903055, 056/030/903056 ஆகியவைகள் தவறுதலாக வரிநிர்னயம் செய்யப்பட்டுள்ளது என ஆய்வில் தெரியவருகிறது.

எனவே, மேற்படி 2017–2018 இரண்டாம் அரையாண்டு முதல் புதிதாக அளவீடு செய்து நிர்ணயம் செய்யப்பட்ட 34 வரிவிதிப்புகளில் வரிவிதிப்பு எண்கள். 056/030/902996, 056/030/903025, 056/030/903028 056/030/903054, 056/030/903055, 056/030/903056 ஆகியவைகள் வேளாளர் கல்வி நிறுவனங்களின் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களின் கீழ் அமையப்பெற்றுள்ள காரணத்தினால் மேற்படி வரிவிதிப்புகளை நிரந்தரமாக நீக்கம் செய்யவும் இதன்மூலம் 2017–18 இரண்டாம் அரையாண்டு முதல் தொடர்ந்து வரும் நிலுவைத் தொகைகளை கேட்பிலிருந்து தள்ளுபடி செய்யவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

## அலுவலகக் குறிப்பு

அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.அ1/1040/2023**

**472. அனுமதி வழங்கப்பட்டது.**

28.) ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1 IRTT பகுதிக்கு அருகில் உள்ள சித்தோடு பேரூராட்சிக்குட்பட்ட நல்லாகவுண்டம்பாளையம் பகுதியில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் 3264 எண்ணிக்கையிலான அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், தற்போது பெரும்பள்ளம் ஓடையின் இருபுறம் கரைகளில் குடியிருப்புகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. சீர்மிகு திட்டத்தின் கீழ் ஈரோடு மாநகராட்சியால் மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்றி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்தில் முதற்கட்டமாக 100 பயனாளிகளுக்கு குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், நல்லாகவுண்டம்பாளையம் பகுதியில் கடந்த 24.04.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு வீட்டு வசதி துறையின் அமைச்சர், மதிப்பிற்குரிய ஆணையாளர், ஈரோடு மாநகராட்சி மற்றும் தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஆகியோர்களுடன் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மேற்கண்ட பகுதியில் 3264 எண்ணிக்கையிலான

குடியிருப்புகளுக்கு தேவையான நிரந்தர கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஏற்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டது.

எனவே நிரந்தர கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு தனியார் ஆலோசகர் மூலம் விரிவான திட்ட அறிக்கை (DETAILED PROJECT REPORT) தயாரித்து அளிக்கவும், அதற்கு ஆகும் செலவினம் ரூ.20.00 இலட்சத்தில் மேற்கொண்டமைக்கு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :-</u>

1. அனுமதி வழங்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண்.**இ1/4367/2022

**473. ஒப்புதல் வழங்கப்பட்டது. 43—ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.ஜா. சபுராமாமின்ஹாஜ் அவர்கள் மேற்படி பொருளிற்கு ஆட்சேபனை தெரிவித்தார்.**

**29.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1 IRTT பகுதிக்கு அருகில் நல்லாகவுண்டம்பாளையம் பகுதியில் அமைந்துள்ள அரசின் அடுக்குமாடி குடியிருப்பு பகுதிக்கு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணிக்கு தனியார் ஆலோசகர் மூலம் விரிவான திட்ட அறிக்கை (DETAILED PROJECT REPORT) தயாரித்தல் பணிக்கு 14.12.2022

அன்று மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, மேற்படி பணிக்கு E-Tendering அல்லது மூடி முத்திரையிட்ட முறையில் 06.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது, அதன் விபரம் பிள்வருமாறு,

1. திருவாளர். GLENCY DOCMRA CONSULTANTS INDIA PRIVATE LIMITED

2. திருவாளர். ECLAT DESIGNS & INFRASTRUCTURE PRIVATE LIMITED

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களும் மேற்படி பணிக்கான டேவணித்தொகை வழங்கியுள்ளார்கள். மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை 09.01.2023 அன்று தொழில்நுட்ப கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் வரிசை எண். 1ல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி

மட்டும் ஒப்பந்தப்புள்ளியின் தொழில்நுட்ப தகுதிக்களுக்கான நிபந்தனைகளில் தெரிவித்துள்ளபடி தகுதி வாய்ந்ததாக உள்ளது. எனவே மேற்படி தகுதிவாய்ந்த ஒப்பந்தபுள்ளியின் விலைப்படிவத்தை (Price bid) 10.01.2023 அன்று மதியம் 3.30 மணிக்கு திறக்கப்பட்டதில், பெறப்பட்ட விலைவிகிதத்தை ஒப்புநோக்கும்போது பெறப்பட்ட விபரம் கீழ்க்கண்டவாறு,

| | | |
|---|---|---|
| 1. | திருவாளர் .GLENCY DOCMRA CONSULTANTS INDIA PRIVATE LIMITED | Rs. 19,94,000/- [Including GST] |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளியான ஒப்பந்ததாரர் திருவாளர். GLENCY DOCMRA CONSULTANTS INDIA PRIVATE LIMITED நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை, மேலும் குறைத்துக் கொடுக்குமாறு, இவ்வலுவலக கடிதம் எண். இ1/4367/2022–ன்படி கேட்பு 10.01.2023 அன்று வழங்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 11.01.2023 தேதிய கடிதத்தில் போக்குவரத்து மற்றும் வேலை ஆட்களின் கூலி விலை உயர்ந்துள்ளதால் தற்போது மேலும் விலையை குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார். எனவே பணியின் அவசர அவசியம் கருதி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளியான ஒப்பந்ததாரர் திருவாளர். GLENCY DOCMRA CONSULTANTS INDIA PRIVATE LIMITED நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு : -</u>

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளியான ஒப்பந்ததாரர் திருவாளர். GLENCY DOCMRA CONSULTANTS INDIA PRIVATE LIMITED நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி திருவாளர். GLENCY DOCMRA CONSULTANTS INDIA PRIVATE LIMITED நிறுவனத்தாரின்

ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்க மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதியைப் பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண்.இ**1/4367/2022

**474. ஒப்புதல் வழங்கப்பட்டது. 43—ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.ஜா. சபுராமாமின்ஹாஜ் அவர்கள் மேற்படி பொருளிற்கு ஆட்சேபனை தெரிவித்தார்.**

**30.)** இயக்குநர் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை சென்னை அவர்களின் கடித ந.க.எண்.10083/ இ1 /எஸ்2 /2013 நாள். 17.05.2023–ல் ஈரோடு மாநகராட்சியில் மாநகர நல அலுவலராக அயற்பணியில் 19.07.2013 முதல் 19.11.2014 வரை பணிபுரிந்த திருமதி. ஆர்.சுமதி துணை இயக்குநர் பொதுசுகாதாரம் மற்றும் நோய்தடுப்புத்துறை என்பவருக்கு விடுப்பு பங்களிப்புத்தொகை மற்றும் ஓய்வூதிய பங்களிப்பு தொகை ஆகியவை ஈரோடு மாநகராட்சியால் வழங்கப்படவில்லை எனவும், முதன்மை கணக்காயர் சென்னை அவர்களின் தணிக்கை அறிக்கையில் விடுப்பூதிய பங்களிப்புத் தொகை ரூ.1.18.434/– எனவும், ஓய்வூதிய பங்களிப்பு தொகை ரூ.1,17,859/– எனவும் குறிப்பிடப்பட்டு தொகையினை முதன்மை கணக்காயர் சென்னை அவர்களுக்கு வங்கி வரைவோலையாக வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது

அயற்பணியில் மாநகர நல அலுவலராக பணிபுரிந்த திருமதி. ஆர்.சுமதி துணை இயக்குநர் பொதுசுகாதாரம் என்பவருக்கு (LSC = 1,18,434/– + PC = 1,17,859/– = 2,36,293/–) (ரூபாய் இரண்டு இலட்சத்து முப்பதாயிரத்தி இருநூற்றி தொண்ணூற்றி மூன்று மட்டும்) முதன்மை கணக்காயர் சென்னை அவர்களுக்கு செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u>

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.சி2/2381/2023**

**475. அனுமதி வழங்கப்பட்டது.**

**31.)** இயக்குநர் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை சென்னை அவர்களின் கடித ந.க.எண்.102005/ இ1 /எஸ்2 /2012 நாள். 20.05.2023–ல் ஈரோடு மாநகராட்சியில் மாநகர நல அலுவலராக அயற்பணியில் 16.10.2012 முதல் 18.07..2013 வரை பணிபுரிந்த திருமதி. பி.அருணா என்பவருக்கு விடுப்பு பங்களிப்புத்தொகை மற்றும் ஓய்வூதிய பங்களிப்பு தொகை ஆகியவை ஈரோடு மாநகராட்சியால் வழங்கப்படவில்லை எனவும், முதன்மை கணக்காயர் சென்னை அவர்களின் தணிக்கை அறிக்கையில்

விடுப்பூதிய பங்களிப்புத்தொகை ரூ.49,794/– எனவும் ஓய்வூதிய பங்களிப்பு தொகை ரூ.39,509/– எனவும் குறிப்பிடப்பட்டு தொகையினை முதன்மை கணக்காயர் சென்னை அவர்களுக்கு வங்கி வரைவோலையாக வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

அயற்பணியில் மாநகர நல அலுவலராக பணிபுரிந்த திருமதி. பி.அருணா என்பவருக்கு(LSC = 49,794/– + PC = 39,509/– = 89,303/–) (ரூபாய் எண்பத்தி ஒன்பதாயிரத்தி முன்னூற்றி மூன்று மட்டும்) முதன்மை கணக்காயர் சென்னை அவர்களுக்கு செலுத்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.சி2/2582/2023**

**476. அனுமதி வழங்கப்பட்டது.**

**32.)** ஈரோடு மாநகராட்சிக்கு ஊராட்சி கோட்டையிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் தனிக்குடிநீர் திட்டம் அம்ரூத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு தற்போது இத்திட்டத்தின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கழகம் TUFIDCO, சென்னை அவர்களின் கடிதம் எண். TUFIDCO/AMRUT/ERODE/638/AM(8) 2015 நாள்.

17.02.2016–ன் வழிகாட்டுதலின்படி நடைமுறைபடுத்த உபவிதிகள் குறித்து மாமன்றம் தீர்மானம் 23.02.2016–ம் தேதிய 365–ம் எண் தீர்மானத்தில் அனுமதி வழங்கப்பட்டது.

AMRUT திட்டத்தின் கீழ் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் குடிநீர் இணைப்பு கேட்பு எழுப்பப்படவேண்டியது அவசியமாகிறது. மாமன்ற தீர்மானம் எண். 365 நாள். 23.02.2016 மாமன்ற அனுமதி வழங்கப்பட்ட உபவிதியில் உள்ளவாறு ஏற்கனவே உள்ள ஒரே தவணையில் வைப்புத் தொகை செலுத்தும்படி உள்தை 10 சம தவணைகளாகப் பிரித்து குடிநீர் இணைப்புக் கேட்பினை எழுப்பும்பட்சத்தில் பொதுமக்களுக்கு அதிக சிரமம் இன்றி வைப்புத் தொகை செலுத்த ஏதுவாகவும் குடிநீர் இணைப்புக் கேட்பினை உடனடியாக எழுப்ப ஏதுவாகவும் இருக்கும். எனவே ஒரே தவணை மற்றும் பகுதியளவு தவணை முறைகள் என இருமுறைகளிலும் (Partial Payment Option) வைப்புத்தொகையினை பெற குடிநீர் கட்டண உபவிதியில் திருத்தம் செய்வதற்கும் மேற்கண்ட பொருள் தொடர்பான செலவினங்களுக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு:**</u>

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**நக.எண். இ2/0259/2015**

**477. அனுமதி வழங்கப்பட்டது.**

33.) ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில், ஈரோடு நகராட்சியாக இருந்த போது உள்ள 18 நகர சுகாதார செவிலியர் பணியிடங்களில், தற்போது 9 நகர சுகாதார செவிலியர் பணியிடங்கள் காலியாக உள்ளது. மாநகராட்சியில் பெருகிவரும் மக்கள் அடர்த்தி காரணமாக பொது சுகாதார சேவைகளான கர்ப்பிணி பெண்கள் தொடர் கண்காணிப்பு பணிகள், டாக்டர். முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி திட்டம், தொற்றா நோய்கள் தொடர் சிகிச்சை சேவைகள் மற்றும் வாராந்திர தடுப்பூசி செலுத்துதல் போன்ற அத்தியாவசிய பணிகள் போதிய செவிலியர்கள் இல்லாமையால் மக்களை சென்றடைவதில் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது.

எனவே காலியாக உள்ள மேற்கண்ட 9 நகர்புற சுகாதார செவிலியர் பணியிடங்களை அவசர, அத்தியாவசியம் கருதி, மாநகராட்சி நிதிலிருந்து தற்காலிகமாக 6 மாதங்களுக்கு ஒருமுறை அல்லது பொது சுகாதாரத்துறையால் நிரப்பப்படும் வரை மாமன்ற தீர்மானங்களின் அடிப்படையில் நிரப்பிக்கொள்ள அனுமதி கோரியதில், இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை கடிதம் எண். 2872841/நஆசுநி/அ1/2022, நாள்: 30.07.2022–ன் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்.170 நாள்: 30.08.2022–ன்படி, மாநகராட்சி பொது நிதியின் மூலம், தற்காலிகமாக 6 மாதங்களுக்கு ஒருமுறை அல்லது பொது சுகாதாரத்துறையால் நிரப்பப்படும் வரை, ஒப்பந்த அடிப்படையில் 9

நகர சுகாதார செவிலியர் பணியிடங்கள் பூர்த்தி செய்ய அனுமதி பெறப்பட்டு, மேற்படி பணியிடங்கள் பூர்த்தி செய்ய 26.08.2022 அன்று நேர்காணல் நடைபெற்றதில், தகுதியான நபர்கள் தேர்வு செய்யப்பட்டு, 12.09.2022 அன்று 9 நகர்புற சுகாதார செவிலியர் பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. ஈரோடு மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்.216, நாள்: 30.09.2022–ன்படி மேற்கண்ட 9 நகர்புற சுகாதார செவிலியர் பணியிடங்களுக்கு 6 மாதங்களுக்கு (செப்டம்பர்-2022 முதல் பிப்ரவரி-23 வரை) அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியிடங்களுக்கான செலவுத் தொகை கிழ்க்கண்டவாறு:

| வ. எண். | விபரம் | ஒரு மாத ஊதியம் | 6 மாதங்களுக்கான மொத்த செலவினம் |
|---|---|---|---|
| 1. | ஒரு நபருக்கான ஊதியம் | ரூ.14,000/– | ரூ.84,000/– |
| 2. | 9 நபர்களுக்கான ஊதியம் | ரூ.1,26,000/– | ரூ.7,56,000/– |
| 3. | ஒரு நபருக்கான EPF 13.5% செலவினம் | ரூ.1,890/– | ரூ.11,340/– |
| 4. | 9 நபர்களுக்கான EPF 13.5% செலவினம் | ரூ.17,010/– | ரூ.1,02,060/– |
| | (வ.எண்.2 +4) மொத்தம் | ரூ.1,43,010/– | ரூ.8,58,060/– |

எனவே மாநகராட்சிக்கு 6 மாதங்களுக்கு 9 நகர்புற சுகாதார செவிலியர் பணியிடங்களுக்கு மொத்த செலவு தொகை ரூ.8,58,060/– (ரூபாய் எட்டு லட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து அறுபது) உத்தேச செலவினத்திற்கும், மார்ச்-2023 முதல் மே-2023 வரை ஊதியம்

வழங்கியமைக்கு பின்னேற்பும், ஜூன்-2023 முதல் ஆகஸ்ட்-2023 வரை ஊதியம் வழங்கவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

9 நகர்புற சுகாதார செவிலியர் காலிப் பணியிடங்களை அவசர அத்தியாவசியம் கருதி, மாநகராட்சி நிதிலிருந்து தற்காலிகமாக 6 மாதங்களுக்கு ஒருமுறை அல்லது பொது சுகாதாரத்துறையால் நிரப்பப்படும் வரை மாமன்ற தீர்மானங்களின் அடிப்படையில் நகர்புற சுகாதார செவிலியர்களை ஒப்பந்த அடிப்படையில் பூர்த்தி செய்தமைக்கும், மார்ச்-2023 முதல் மே-2023 வரை ஊதியம் வழங்கியமைக்கு பின்னேற்பும், ஜூன்-2023 முதல் ஆகஸ்ட் -2023 அனுமதியும், மேற்கண்ட உத்தேச செலவிளம் தொகை ரூ.8,58,060/–ஐ மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.

**நக.எண். எச்1/6958/2014**

**478. அனுமதி வழங்கப்பட்டது.**

**இடம்- ஈரோடு** **மேயர்.**

**நாள். 30.06.2023** **ஈரோடு மாநகராட்சி.**

**ஈரோடு**